இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 22 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 15 – செவ்வாய்க்கிழமை 01 செப்டம்பர் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 22 : Thiruvalluvar Year - 2057 - Aavani 15 - Tuesday 01 September 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


### மக்கள் அரவணைக்கும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு பாதுகாப்பு குறைப்பு:

# அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை!

## கட்சித் தலைவர்கள் கண்டனம்!

சென்னை, செப். 1-

**தி.மு.கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு த.வெ.க. அரசு பாதுகாப்பைக் குறைத்திருப்பது அரசியல் பழி வாங்கும் நடவடிக்கை என்று கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

தி.மு.கழகத் தலைவர், முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கான பாதுகாப்பை, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக த.வெ.க. அரசு குறைத்துள்ளது எனினும் தினந்தோறும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செல்லுமிடமெல்லாம் மக்கள் அரவணைத்து வருகின்றனர்.

தி.மு.க. தலைவரும், முன்னாள் முதலமைச்சரு மான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வந்த நிலையில், அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பாதுகாப்பை த.வெ.க. அரசு குறைத்துள்ளது.

2021-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. முதல்வராக மு.க.ஸ்டாலின் பதவியேற்றதைத் தொடர்ந்து, அவருக்கு நாட்டின் மிக உயரிய 'இசட் பிளஸ்' பிரிவு பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தது. அதன்படி, துப்பாக்கி ஏந்திய சுழற்சி முறை படைவீரர்களும், அதி

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடைபயிற்சி மேற்கொண்டபோது செல்பி ஆர்வம் காட்டிய பொதுமக்கள்!



நவீனப் பாதுகாப்பு வாகனங்களும் அவரது தீவிரப் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டு வந்தன.

அதன்படி தினமும் சுமார் 50 கமாண்டோ மற்றும் சிறப்புப் பிரிவு போலீஸார் சுழற்சி முறையில் 24 மணி நேரமும் தீவிரக் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

த.வெ.க. அரசு திடீர் என்று மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு 'இசட் பிளஸ்' பாதுகாப்பை 'இசட்' பிரிவாக குறைத்துள்ளது. இப்பிரிவில் மொத்தம் 22 காவலர்கள் வரை பணியில் இருப்பார்கள்.

பாதுகாப்பு குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இல்லத்துக்குச் செல்லும் 4 முக்கிய நுழைவுவாயில்களிலும் போலீஸார் சுழற்சி முறையில் நிறுத்தப்பட்டுத் தீவிர சோதனைகளுக்குப் பிறகே பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

தற்போது பாதுகாப்பு குறைப்பால், 2 நுழைவுவாயில்கள் மட்டுமே பயன்பாட்டில் வைக்கப்பட்டு, அங்குப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் போலீஸாரின் எண்ணிக்கை 10ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

இசட் பிளஸ் பாதுகாப்பை, இசட் பாதுகாப்பாக குறைத்துள்ள த.வெ.க. அரசின் செயல், அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

**தொல். திருமாவளவன்**

திருச்சி விமான நிலையத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு இசட் பிரிவு பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளது என்ற கேள்விக்கு, "அது ஏற்புடையதல்ல இது வரை வழங்கி வந்த பாதுகாப்பை வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அதற்கான ஏற்பாடுகளையும் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

**ஜவாஹிருல்லா - தமீமுன் அன்சாரி!**

மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா, மற்றும் தமீமுன் அன்சாரி எம்.எல்.ஏ. உள்பட பல்வேறு கட்சித் தலைவர்கள் த.வெ.க. அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நாள்தோறும் ஏராளமான கட்சியினரும், பொதுமக்களும் சந்தித்து வரும் நிலையில், அவருக்கான பாதுகாப்பை திரும்பப் பெற்றுள்ளதற்கு பல்வேறு தரப்பினரும் கண்டனங்களை பதிவு செய்து வருகின்றனர்.

---

### நேபாள பெரு வெள்ளத்தில் சிக்கி

## உயிரிழந்தோர் எண்ணிக்கை 800 ஆக அதிகரிப்பு!

காட்மண்ட், செப். 1-

இமயம் உருகிப் பெருக்கெடுத்த கோரத் தாண்டவத்தால், சில நிமிடங்களில் தவிடுபொடியானது நேபாளத்தின் ரசுவா மற்றும் நுவாகோட் மாவட்டங்கள்... சுனாமி போன்று அடித்து வரப்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 800 ஆக அதிகரித்துள்ளது. கோர சம்பவம் நடந்து 5 நாட்கள் ஆன நிலையில், வெள்ளத்தில் சிக்கி மாயமான 3 ஆயிரம் பேரின் கதி என்னவென்று தெரியாதால், அவர்களை இழந்து தவிக்கும் உறவினர்கள் பரிதவிப்பில் உள்ளனர்.

இமயமலைப் பகுதியில் நிலவும் மோசமான வானிலை மற்றும் கடினமான மலைப்பகுதிகளுக்கு இடையேயும் மீட்புப் பணிகள் இரவு பகலாக தீவிரமாக நடந்து வருகின்றன. மீட்புப்பணிகளில் நேபாள ராணுவத்தினர் 5 ஆயிரம் பேர் உள்பட 11 ஆயிரத்துக்கும் அதிகமான வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். போட்டே கோசி நதியில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் மீட்பு பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரை ஆன்மீக சுற்றுலா சென்ற 21பேர் மீட்கப்பட்டு சென்னை திரும்பிய நிலையில், 100 தமிழர்கள் உள்பட 275 இந்தியர்கள் மாயமாகி இருப்பதால், அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## தமிழ்நாட்டில் மழை!

சென்னை, செப். 1-

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும்

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். ராணிப்பேட்டை, சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவையிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசான மழையும் பெய்யக்கூடும்.

---

### சேலம்

## அரசு மருத்துவமனையில் லஞ்சம்! பொதுமக்கள் குற்றச்சாட்டு!

சேலம், செப். 1-

சேலம் அரசு மருத்துவமனையில் நோயாளிகளை பார்க்கச் செல்லும் உறவினர்களிடம் கட்டாயப்படுத்தி லஞ்சம் வாங்கப்படுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டி உள்ளனர்.

சேலம் அரசு பொது மருத்துவமனையில் தினந்தோறும் ஆயிரக்கணக்கானவர்கள் புற நோயாளிகளாகவும் சுமார் 2 ஆயிரம் உள் நோயாளிகளாகவும் சிகிச்சை பெற்று வருகின்றனர். சேலம் மாவட்டத்தில் இருந்து மட்டுமல்லாமல் ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்தும் ஏராளமானவர்கள் சிகிச்சை பெற இம்மருத்துவமனைக்கு வருகின்றனர். இந்த அரசு மருத்துவமனையில் அனைத்து பிரிவுகளிலும் லஞ்சம் தலைவிரித்து ஆடுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டி உள்ளனர்.

இம்முறைகேடுகள் குறித்து மருத்துவமனை முதல்வரிடம் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை என்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். தூய ஆட்சி என்று பெருமை பீற்றிக் கொள்ளும் இந்த அரசில், ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்கள் சிகிச்சை பெறும் அரசு மருத்துவமனையில் லஞ்சம் தலை விரித்து ஆடுவது இந்த ஆட்சியின் அவல நிலைக்கு உதாரணம் என்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

## சென்னை ஐ.சி.எஃப்.பில் தயாரிக்கப்பட்ட பாரத் ரயில்கள்!

சென்னை, செப். 1-

சென்னை ஐ.சி.எஃப்பில் தயாரிக்கப்பட்ட 2 அம்ரித் பாரத் ரயில்கள் தெற்கு ரயில்வேயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த ரயில்களை தமிழகத்துக்குள் இயக்க பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னை ஐ.சி.எஃப்பில் தற்போது வந்தேபாரத் ரயில், அம்ரித் பாரத் ரயில் உள்ளிட்ட ரயில் வகைகள் தயாரிப்பில் தீவிர கவனம் செலுத்தப்படுகின்றன. வந்தேபாரத்துக்கு இணையான வேகமும் பாதுகாப்பும் கொண்ட, அம்ரித் பாரத் ரயில் 'புஸ் புல்' தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படுகிறது. இந்த ரயிலின் இருபுறமும் இன்ஜின் கொண்டு இயக்கப்படுவதால் மணிக்கு 130 கி.மீ. வேகத்தில் செல்லும். ஒரே நேரத்தில் 1,834 பேர் பயணிக்கும் வகையில் 12 முன்பதிவு பெட்டிகள் உட்பட 22 எல்.எச்.பி. பெட்டிகள் இருக்கும்.

இந்நிலையில், ஐ.சி.எஃப்.பில் சமீபத்தில் தயாரிக்கப்பட்ட, 2 அம்ரித் பாரத் ரயில்கள் தெற்கு ரயில்வேக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த ரயில்களை தமிழகத்தின் தென்மாவட்டங்களுக்கும், கோவை வழித்தடத்திலும் இயக்க வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

---

### சர்ச்சைப் பேச்சு: அமைச்சர் மரிய வில்சனின்

# எம்.எல்.ஏ. சான்றிதழை திரும்பப் பெற வேண்டும்!

## தேர்தல் ஆணையத்துக்கு வழக்கறிஞர் நோட்டீஸ்!

சென்னை, செப். 1 –

தன்னுடைய கல்வி நிறுவனத்துக்காக லஞ்சம் கொடுத்ததாக சட்ட சபையில் பேசிய அமைச்சர் மரிய வில்சன் மீது ஊழல் வழக்குப்பதிவு செய்வதுடன், அவருடைய எம்.எல்.ஏ. சான்றிதழை திரும்ப பெற வேண்டும் என்று தேர்தல் கமிஷனுக்கும், லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கும் வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

இந்திய தேர்தல் கமிஷனர். தமிழ்நாடு மாநில தேர்தல் கமிஷனர், மாநில தலைமை தேர்தல் அதிகாரி, தமிழ்நாடு லஞ்ச ஒழிப்பு போலீஸ் இயக் குனர் ஆகியோருக்குசென்னை ஐகோர்ட்டு வழக்கறிஞர் சி.ஜெனிபர் தன் வழக்கறிஞர் பி.விஜயேந்திரன்மூலம் அனுப்பியுள்ள நோட்டீசில் கூறியிருப்ப தாவது:-

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் ஆர்.கே.நகர் தொகுதியில் த.வெ.க. சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர் மரிய வில்சன். இவர், தற்போது மாநில நிதி அமைச்சராக உள்ளார். சமீபத்தில் சட்டசபையில் அவர் பேசும் போது தனது கல்வி நிறுவனத்துக்கு அனுமதி தொடர்பாக முன்னாள் அமைச்சருக்கு லஞ்சம் கொடுத்ததாக கூறியுள்ளார். இது அரசியலமைப்புக்கு எதிரானது மட்டுமல்லாமல் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி குற்றமாகும்.

**ஊழல் வழக்கு**

அமைச்சர் மரிய வில்சனின் இந்த பேச்சு குறித்து பா.ஜனதா, மாநிலத்தலைவர் நயினார் நாகேந்திரன் எதிர்ப்பு தெரிவித்து பேசியது அனைத்து ஊடகங்களிலும் வெளியானது. இது தமிழ்நாடு மக்களிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. அமைச்சர் மரிய வில்சன் அரசு ஊழியர் என்பதால் அவரும் ஊழல் தடுப்பு சட்டத்திற்கு உட்பட்டவர்தான். எனவே, அவர் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட வேண்டும்.

அவர் அமைச்சராக பதவியேற்ற போது எடுத்த பதவி பிரமாணத்திற்கு, முரணாகவும் தேர்தல் ஜனநாயகத்திற்கு விரோதமாகவும் செயல் பட்டுள்ளார். அரசியலமைப்பு பதவியில் அதிகாரத்துடன் உள்ள மரிய வில்சன் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்திற்கும் உட்பட்டவர்தான். அவர் சட்டசபை விதிகளையும் பின்பற்றவில்லை, மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தையும் பின்பற்ற வில்லை.

**அதிகாரம்**

அவர் ஒரு புதிய விதியையும் விஞ்ஞான ரீதியான சமூகத்தையும் உருவாக்க பார்க்கிறார். மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதியின் பதவியை திரும்பப் பெற முடியாது. அதேநேரத்தில் அவர் தேர்தலில் வெற்றி பெற்று தொகுதி எம்.எல்.ஏ.வாக தேர்வானதற்காக வழங்கப்பட்ட சான்றிதழை திரும்பப் பெற தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளது.

எனவே, அமைச்சர் மரிய வில்சன் மீது லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப்பதிவு செய்ய வேண்டும். இல்லையென்றால் கோர்ட்டு வாயிலாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு புகாரில் கூறப்பட்டுள்ளது.

---

### பெட்ரோலில்

## எத்தனால் கலப்பு அளவு குறித்த வழக்கு!

### உச்சநீதிமன்றம் விசாரணை!

புதுடெல்லி, செப். 1–

**பெட்ரோல் பங்க்குகளில் விற்பனை செய்யப்படும் பெட்ரோலில் எத்தனால் கலப்பு எவ்வளவு சதவீதம் உள்ளது என்பதை குறிப்பிட உத்தரவிடக் கோரிய மனுவை உச்சநீதிமன்றம் நேற்று விசாரித்தது. உச்ச நீதிமன்றத்தில், நரேந்திர குமார் கோஸ்வாமி என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில், பெட்ரோல் பங்க்குகளில் உள்ள ஒவ்வொரு எரி பொருள் சப்ளை இயந்திரத்திலும் பெட்ரோலில் எத்தனால் கலப்பு எவ்வளவு சதவீதம் உள்ளது என்பதை கட்டாயமாக குறிப்பிட உத்தரவிட வேண்டும். மேலும், விற்பனைக்கான ரசீதிலும் எத்தனால் சதவீதத்தை தெளிவாக குறிப்பிட வேண்டும்.**

**மேலும், எந்த வகையான வாகனங்களில் எந்த அளவு எத்தனால் கலந்த பெட்ரோலைப் பயன்படுத்தலாம் என்பதை வாகன தயாரிப்பாளர், மாடல், இன்ஜின் வகை மற்றும் தயாரிக்கப்பட்ட ஆண்டு ஆகியவற்றின் அடிப்படையில் அறிந்துகொள்ளும் வகையில் அரசு அதிகாரப்பூர்வ இணையதளத்தை உருவாக்க வேண்டும். இ20 பெட்ரோலை தற்போதுள்ள வாகனங்களில் பயன் படுத்துவதால் ஏற்படும் மைலேஜ் குறைவு, பராமரிப்புச் செலவு, வாகன உத்தரவாதம், இன்ஜின் ஆயுள் மற்றும் காப்பீடு உள்ளிட்ட பாதிப்புகளை ஆய்வு செய்ய நிபுணர் குழுவை அமைக்க வேண்டும்.**

**இ20 திட்டம் தொடர்பான கொள்கை முடிவுகள் மற்றும் பாதுகாப்பு ஆய்வு அறிக்கைகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் ஒன்றிய அரசுக்கு உத்தரவிட வலியுறுத்தியுள்ளார். இந்த மனுவை நேற்று நீதிபதிகள் எம்.எம். சுந்தரேஷ் மற்றும் பிரசன்னா பி. வராலே ஆகியோர் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வு விசாரித்தது.**